# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 21 திங்கட்கிழமை 03.02.2025 கதிர் 116







# இல்லத்தை விட்டு வெளியேறுங்கள் மஹிந்தவுக்கு அனுர அறிவுரை!



கொழும்பு, பெப் 03
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது பயன்படுத்தி வரும் பெரிய உத்தியோகபூர்வ இல்லத்தை வெளியேற வேண்டும் என்றும், மஹிந்தவுக்கு வாழ வீடொன்று இல்லையெனில் அவருக்கு வேறு பொருத்தமான வீடொன்றை வழங்க முடியும் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கூறுகிறார்.

கல்கமுவ பகுதியில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அஜனாதிபதி அனுரகுமார மேலும் கூறுகையில்,

அரசியல்வாதியின் திருட்டையும் வீண்விரயத்தையும் நிறுத்தச் சொல்லப்பட்டது, நாங்கள் அதைச் செய்தோம் எவ்வளவு வீண்விரயங்கள் நிறுத்தப்பட்டன? 7➤

## டொனால்ட் ட்ரம்பின்
# “அமெரிக்காவே முதலில்” கொள்கையினால் யூ.எஸ். எயிட் திட்டங்களுக்கு மூடு விழா!

**கொழும்பு, பெப். 03**

**அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்பின் "அமெரிக்காவே முதலில்" என்ற கொள்கைப் பிரகடனத்தினால் இலங்கையில் உள்ள பல அரசசார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் செயற்றிட்டங்கள் முடக்கப்பட்டு, இழுத்து மூடப்படவேண்டிய நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.**

**அமெரிக்க அரசாங்கம் யூ. எஸ். எயிட் ஊடாக வெளிநாடுகளுக்கு வழங்கிவரும் நிதி உதவிகளை முடக்க ட்ரம் அரசாங்கம் முடிவு செய்திருப்பதனால் இலங்கையின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பல நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளன என்றும், இதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் பணியாளர்கள் வேலைகளை இழக்க வேண்டிய ஆபத்தில் உள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

சர்வதேச மேம்பாட்டுத் திட்டங்களை விட உள்நாட்டு செலவினங்களுக்கு முன்னுரிமை அளித்தல் என்ற கொள்ளையுடன், அமெரிக்க அரசாங்க செயல்திறன் துறையை வழிநடத்துவதற்கென அதிபர் ட்ரம்பால் நியமிக்கப்பட்ட பில்லியனர் எலன் மஸ்க்கின் ஆலோசனைக்கமையவே இந்த நிதி இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

பில்லியனர் எலன் மாஸ்க் யூ.எஸ். எயிட் நிறுவனத்தை ஒரு “குற்றவியல் அமைப்பு” என்று வர்ணித்ததன் பின்னர், யூ.எஸ். எயிட் நிறுவனத்தின் செயற்பாடுகளை முடக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், அதனையடுத்து யூ.எஸ். எயிட் நிறுவனத்தில் பெருமளவானோர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 60 சிரேஷ்ட நிலைப் பணியாளர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில், மனித உரிமைகள், நல்லாட்சி மற்றும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் மூன்றாம் பால்நிலை உரிமைகளில் பணி புரியும் பல உள்நாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் யூ.எஸ். எயிட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடனேயே தமது பிரதான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்த நிதி நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து ஜனநாயகத்தை மேம்படுத்தல், மனித உரிமைகள் மேம்பாடு மற்றும் பால்நிலை சமத்துவத்துக்காகச் செயலாற்றும் பல தன்னார்வ அமைப்புகள் தங்கள் திட்டங்களைத் தக்க வைத்துக் கொள்ள போராடி வருகின்றன.

“அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் இந்த முடிவு எங்களைக் கண்மூடித்தனமாகப் பாதித்துள்ளது. நாங்கள் எமது பணியாளர்களைப் பணிநீக்கம் செய்ய வேண்டி ஏற்பட்டால் நடைமுறையில் உள்ள பல திட்டங்கள் முழ்ந்துவிடும். அலுவலகங்களை இழுத்து மூட வேண்டிய நிலை தான் ஏற்படும்” என்று பாதிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அதிகாரி ஒருவர் கூறினார்.


(ஐ)



## போதை பாவனையால் இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம், பெப் 03
யாழ்ப்பாணத்தை சேர்ந்த 29 வயதுடைய இளைஞன் ஒருவர் அதீத போதை காரணமாக சுகவீனமுற்று யாழ்.போதான வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார். 7➤

## இயந்திரம் செயலிழப்பு நோயாளிகள் அவதி



கொழும்பு, பெப் 03
கராப்பிட்டிய வைத்தியசாலையில் உள்ள அஞ்சியோகிராம் இயந்திரம் கிட்டத்தட்ட ஒரு 7➤

## வாகனங்கள் சுற்றிவளைப்பு



கொழும்பு, பெப் 03
வலான ஊழல் தடுப்பு பிரிவினரால் கலவான பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சட்டவிரோதமாக 7➤

## அரச ஊழியர்களுக்கு 90 பில்லியன் ஒதுக்கீடு



கொழும்பு, பெப் 03
இலங்கையில் அரசசேவை சம்பள உயர்வுக்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் 90 பில்லியன் ரூபாவை ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகம பகுதியில் நடைபெற்ற வைபவம் 7➤

## பிரதி அமைச்சருக்கு மீனவர்கள் எதிர்ப்பு



கொழும்பு, பெப் 03
மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்திற்கு விஜயம் செய்த கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே எரிபொருளுக்க நியாயமான விலை கோரி மீனவர்களின் எதிர்ப்புக்கு ஆளாகினார்.

“ஒரு லிட்டர் எரிபொருளை 100 ரூபாய்க்கு வழங்குவதாக அரசாங்கம் ஏற்கனவே உறுதியளித்துள்ளது, அதன்படி விலை குறைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். கடந்த ஆண்டு முதல் போராட்டம் நடத்தி வருகிறோம்,

ஆனால் எங்கள் கோரிக்கை இன்னும் 7➤

## அணுசக்தி அதிகார சபையின் புதிய தலைவர் நியமனம்



கொழும்பு, பெப் 03
அணுசக்தி அதிகார சபையின் புதிய தலைவராக கலாநிதி துஷாரா ரத்நாயக்க எரிசக்தி அமைச்சின் பொறியியலாளர் குமார ஜயக்கொடியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பானின் டோக்கியோ பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற துஷாரா ரத்நாயக்க, அணு பொறியியலில் முனைவர் பட்டம் பெற்ற ஒரே இலங்கையர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மின் பொறியியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 24 மணி நேரமும் கடவுச்சீட்டு அலுவலகம் திறந்து வைக்க நடவடிக்கை

கொழும்பு, பெப் 03

தற்போதைக்கு கடவுச்சீட்டு பெறுவதில் நிலவும் நெருக்கடிகளைக் குறைக்கும் வகையில் மிக விரைவில் கடவுச்சீட்டு அலுவலகத்தை 24 மணிநேரமும் திறந்து வைக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உறுதியளித்துள்ளார்.

குருணாகல்- கல்கமுவ பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதும் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் இன்று ஊழல், மோசடியற்ற ஆட்சியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள் நம்பிக்கையுடன் நாட்டுக்கு வரும் நிலையேற்பட்டுள்ளது. நம் நாட்டின் வரலாற்றில் உலக வங்கி வழங்கிய அதிகூடிய தொகையொன்றை அடுத்த வருடமளவில் இந்நாட்டு விவசாயத்துறை அபிவிருத்திக்காக வழங்க உள்ளது.

அதேபோன்று கடவுச்சீட்டு நெருக்கடியை தீர்ப்பதற்கும் நாங்கள் விரைவில் நடவடிக்கை மேற்கொள்வோம். விரைவில் 24 மணிநேரமும் கடவுச்சீட்டு அலுவலகத்தை செயற்பட வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

அதற்காக ஓய்வு பெற்றுள்ள ஊழியர்களை மீண்டும் தற்காலிக அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ள தீர்மானித்துள்ளோம். அதன் ஊடாக விரைவில் கடவுச்சீட்டு பெறுவதில் உள்ள நெருக்கடிகளை தீர்த்து வைப்போம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ)



# பாவனைக்குத் தகுதியற்ற உணவுப் பொருட்கள் மீட்பு



கொழும்பு, பெப் 03

நாட்டு மக்களுக்கு விநியோகிப்பதற்காக உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு சொந்தமான வெயங்கொட களஞ்சியசாலை வளாகத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த அரிசி, பருப்பு, பேரீச்சம்பழம் உள்ளிட்ட 1.5 மில்லியன் கிலோகிராம் உணவுப் பொருட்கள் காலாவதியாகி இருப்பதாகவும் அவை நுகர்வுக்கு பொருத்தமற்றது என்பது தெரியவந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மேற்படி உணவுப் பொருட்கள் நன்கொடையாக பெறப்பட்டுள்ளன. உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு சொந்தமான வெயங்கொடை மாவட்ட தானியக் களஞ்சியத்திற்காக, 28,000 சதுர அடி பரப்பளவைக் கொண்ட 16 களஞ்சியசாலைகள் உள்ளன, அவற்றில் 10 களஞ்சியசாலைகள் உணவு சேமிப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

கடந்த ஆண்டு உலக உணவுத் திட்டத்தின் கீழ் நாட்டிற்கு வழங்கப்பட்ட 1.5 மில்லியன் கிலோகிராம் அரிசி, பருப்பு மற்றும் பேரீச்சம்பழம், ஏழைகள் மற்றும் பாடசாலைக் குழந்தைகளுக்கு இலவசமாக விநியோகிக்க அங்குள்ள மூன்று களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்கப்பட்டன.

கசகஸ்தான், அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பெறப்பட்ட உணவுப் பொருட்களை அதிகாரிகள் சரியான நேரத்தில் விநியோகிக்கத் தவறியதால், உணவுப் பொருட்கள் தற்போது காலாவதியாகிவிட்டன.

இந்த விவகாரம் குறித்து ஆராய்வதற்காக தேசிய மக்கள் சக்தியின் பிரதி அமைச்சர் மொஹமட் முனீர், பாராளுமன்ற உறுப்பினர் ருவான் மாபலகம மற்றும் பொலிஸ் அதிகாரிகள் குழு வெயாங்கொட மாவட்ட தானிய களஞ்சியத்திற்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது(ஐ)

# சுற்றுலா வழிகாட்டி நூல் ஜனாதிபதியிடம் கையளிப்பு



யாழ்ப்பாணம், பெப் 03

யாழ். மாவட்டத்தின் சுற்றுலா வழிகாட்டி நூல் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க விடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் கலாசார ரீதியான சுற்றுலாவை மேன்மைப்படுத்தும் வகையில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையங்கள் தொடர்பில் டிஜிட்டல் அடிப்படையிலான சுற்றுலா வழிகாட்டி நூலானது நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், யாழ். மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரால் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்துப் பிரதேச செயலகங்க பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் நூற்றுக்கு மேற்பட்ட கலாசார ரீதியான சுற்றுலா மையங்களை உள்ளடக்கிய வகையில் விஞ்ஞான ரீதியான ஆய்வினூடாகவும், களத்தரிசிப்பினூடாகவும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால் குறித்த நூல் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விசேட தேவையுடைய சமூகத்தினரின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

கொழும்பு, பெப் 03

விசேட தேவையுடைய சமூகத்தினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத்தில் குழுவொன்றை உருவாக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

விசேட தேவையுடையோரின் அமைப்புக்களினது ஒன்றியத்துடனான சந்திப்பின்போது, சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது, விசேட தேவையுடையவர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டதுடன், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சுயாதீன ஆணைக் குழு ஒன்று நிறுவப்படவேண்டிய தன் அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, சைகை மொழியைத் தேசிய மொழியாக்கும் சட்டமூலம் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், விசேட தேவையுடைய அமைப்புகளின் ஒன்றியத்தினது உறுப்பினர்களால் இதன்போது சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதாகவும் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)



# மன்னார் காற்றாலை மின் உற்பத்தி கோபுரம் இடிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதம்

*மன்னார், பெப் 03*

*மன்னார் கந்தகுளிய பிரதேசத்தில் காற்றாலை மின் உற்பத்தி கோபுரத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.*

*தனியார் மின்சார உற்பத்தி நிறுவனத்திற்கு சொந்தமான காற்றாலை கோபுரத்தின் ஒரு பகுதி திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*அவ்விடத்தில் குறித்த நிறுவனத்திற்கு சொந்தமான ஐந்து காற்றாலை கோபுரங்கள் இருப்பதாகவும், அவற்றில் ஒன்றின் ஒரு பகுதி இவ்வாறு இடிந்து விழுந்துள்ளதாக தெரியவந்துள்ளது.*

*இந்தக் காற்றாலை விசையாழிகளில் ஒன்று 270 அடிக்கு மேல் உயரமும், அங்கு நிறுவப்பட்ட தளம் சுமார் 129 அடி நீளம் கொண்டது.*

*காற்றாலை கோபுரம் இடிந்து விழுந்ததில் ஒரு வீடு முற்றிலுமாக சேதமடைந்ததோடு, அருகில் அமைந்துள்ள இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.*

*இருப்பினும், கோபுரம் இடிந்து விழுந்த நேரத்தில் வீடுகளில் யாரும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)*

# வாகன இறக்குமதிக்கான வரி அதிகரிப்பு தொடர்பில் ஜனாதிபதி அநுரவின் விளக்கம்

கொழும்பு, பெப் 03

நாட்டில் இன்னுமொரு பொருளாதார நெருக்கடி உருவாகுவதை தடுக்கும் நோக்கில், இறக்குமதியாகும் வாகனங்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருணாகல் - கல்கமுவ பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே, நாட்டின் மொத்த டொலர் கையிருப்பு குறைவாக இருப்பதை கருத்தில் கொண்டு, வாகன வரியை உயர்த்தியுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடந்த 5 ஆண்டுகளாக தனிப்பட்ட பயனுக்கான வாகன இறக்குமதி தடைசெய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது கட்டுப்பாடுகளை மெல்லிய முறையில் தளர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரே நேரத்தில் அதிகளவில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவது பொருளாதாரத்தில் எதிர்பாராத சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதால், வரி உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் விளக்கம் அளித்தார்.

மேலும், கடந்த காலத்தில் சட்டவிரோதமாக வாகனங்களை இறக்குமதி செய்து பயன்படுத்திய சிலரை ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களை எதிர்வரும் நாட்களில் கைது செய்யவுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

உர மானியம் ரூ. 15,000 இருந்து ரூ. 25,000 ஆக உயர்த்தப்பட்டிருந்தாலும், அதை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் விவசாயிகளுக்கு சிக்கலை உருவாக்கியுள்ளதாக அவர் ஒப்புக் கொண்டார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார சிக்கல்களை சரிசெய்வதற்காக அதிக நேரம் செலவிட வேண்டிய நிலையில், புதிய வேலைத்திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நடப்பு காலத்தில் வாகனங்களின் விலை அதிகரித்திருந்தாலும், எதிர்காலத்தில் அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி உறுதி அளித்தார்.

இவ்வாறு, பொருளாதாரத்திற்கேற்ற வகையில் கட்டுப்பாடுகளை மெல்லிய முறையில் தளர்த்தும் பணிகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ஐ)

# தங்க நகைக்காக கொல்லப்பட்ட பெண்



கொழும்பு, பெப் 03

சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெருமதியான தங்க நகையை பறித்து கொள்வதற்காக பெண் ஒருவரை கொலை செய்த சம்பவம் இரத்தினபுரியில் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவந்துள்ளதாவது,

இரத்தினபுரி - வெவள்வத்த பொலிஸ் பிரிவில் கலபட பகுதியில் கருக பட்டை தோட்டத்தில் இருந்து பெண் ஒருவரின் சடலம் கடந்த 31 திகதி மீட்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி பன்னில, நிரி எல்ல பகுதியை வசிப்பிடமாக கொண்ட 58 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணும் அவரது கணவரும் கடந்த நான்கு மாதங்களுக்கு முன் அவர்களது மகனுடன் ஏற்பட்ட முரண்பாட்டின்பின் கலபட பகுதிக்கு வந்து தனியாருக்கு சொந்தமான ஓர் காணியில் தங்கியிருந்து அவரது தோட்டத்தில் வேலை செய்து வந்துள்ளனர்.

நாளாந்தம் மாலை வேளையில் அந்த பெண்ணின் கணவர் கலபட சந்தியில் உள்ள வியாபர நிலையங்களுக்கு சென்று வருவார். கடந்த 30 ஆம் திகதி வழமையை போல் கலபட பகுதியில் உள்ள வியாபார நிலையத்திற்கு சென்று சில பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு திரும்பி வந்துள்ளார்.

வீட்டிற்கு வந்த கணவர், நீராட தயாராகி கொண்டிருந்த நிலையில் அவரது மனைவியை காணவில்லை என்று அத்தோட்ட காவலாளியின் உதவியுடன் வீட்டை சுற்றி தேடியுள்ளார். வீட்டை சுற்றி தேடி கிடைக் காததால் 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அறிவித்த பின்னர் வெவள்வத்த பொலிஸ் நிலையத்திற்கு சென்று தெரிவித்துள்ளார்.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸ் நிலைய அதிகாரிகள், அயலவர்களின் உதவியுடன் வீட்டு சுற்று வட்டாரத்தில் தேடி பார்த்த போது, வீட்டில் இருந்து சுமார் 150 மீட்டர் தொலைவில் உள்ள கருக பட்டை தோட்டத்தில் இருந்து குறித்த பெண்ணின் சடலத்தை மீட்டனர். குறித்த பெண்ணின் சடலத்தை, இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியும் இரத்தினபுரி நீதிமன்ற நீதவான் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டதுடன், சடலம் பிரேத பரிசோதனைக்காக இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டது. பிரேத பரிசோதனைகளில் குறித்த பெண் கழுத்து நெறிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பின்னர் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்ட வெவள்வத்த பொலிஸார் அதே பகுதியில் தனியாருக்கு சொந்தமான தோட்டத்தில் பணியாற்றிய நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர். கொலை செய்யப்பட்ட பெண்ணின் கழுத்தில் இருந்து தங்க நகையை பறித்து கொள்வதற்காக குறித்த நபர் கொலை செய்துள்ளமை விசாரணையின்போது தெரியவந்துள்ளது. சந்தேக நபர் இறக்குவானை பகுதியை வசிப்பிடமாக கொண்ட 35 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

சந்தேக நபர் இறக்குவானை பகுதியில் சட்டவிரோத மதுபானம் உற்பத்தி செய்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட ஓர் குற்றவாளி என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை இன்று ஞாயிற்றுக்கிழமை (02) இரத்தினபுரி நீதிமன்ற நீதவான் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தவுள்ளனர். (ஐ)



# ஆயுர்வேத அழகுசாதனப் பொருட்களில் அவதானம்

கொழும்பு, பெப் 03

மக்களுக்கு ஆயுர்வேத மருந்துகள் மற்றும் ஆயுர்வேத அழகுசாதனப் பொருட்களை சிறப்பான தரத்தில் வழங்குவதை இலக்காகக் கொண்டு மிகுந்த அவதானத்துடன் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் நளின் ஜயதிஸ்ஸ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆயுர்வேத துறையின் ஒழுங்குமுறை பொறுப்பிலிருந்து விலகியிருக்கும் போது தரமான மற்றும் உயர்தர பொருட்கள் மக்களுக்கு கிடைப்பதில்லை தற்போது அது குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆயுர்வேத அழகுசாதனப் பொருட்கள் மற்றும் ஆயுர்வேத மருந்துகளின் அனைத்து தயாரிப்புகள் மற்றும் உட்பொருட்களை ஒழுங்குபடுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் அமைச்சர் புதிய உறுப்பினர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

# அரச நிறுவனங்களுக்கான விசேட அறிவிப்பு

கொழும்பு, பெப் 03

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினத்தை ஒரு விசேட நிகழ்வாகக் கருதி, 01ஃ2025 சுற்றறிக்கையின் சில விதிகளை செயல்படுத்த வேண்டாம் என்று பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேலும் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி 1 முதல் 7ஆம் திகதி வரை ஒரு வாரத்திற்கு அனைத்து அரச கட்டிடங்களிலும் தேசியக் கொடி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

பெப்ரவரி 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் கட்டிடங்களை மின் விளக்குகளால் அலங்கரிக்க வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், மின்சார பாதுகாப்பு மற்றும் மின் அலங்காரச் செலவு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் பிரதிநிதித்துவங்களைக் கருத்தில் கொண்டு, மின்விளக்குகளால் கட்டிடங்களை அலங்கரிக்கும் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது. (ஐ)

# யானைகளின் உணவில் பொருள் கலக்கும் விஷமிகள்



கொழும்பு, பெப் 03

கதிர்காமம் - புத்தல வீதியில் காட்டு யானைகளை வன்முறையில் ஈடுபடச் செய்வதற்காக சிலர் கஞ்சா போதைப்பொருள் கலந்த உணவை அவற்றுக்கு வழங்குவதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த காலங்களில் கதிர்காமம் - புத்தல வீதியில் காட்டு யானைகளால் வாகனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் எட்டு பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் யூடியூப் சமூக ஊடகத்தளத்தை நடத்தும் சிலர் காட்டு யானைகளை வன்முறைக்கு உள்ளாக்கும் வகையில் பூசணிக்காய், சர்க்கரை வள்ளிக்கிழங்கு போன்ற வற்றில் கஞ்சா போதைப் பொருள் கலந்து வழங்குவதாக தெரியவந்துள்ளது.

அவற்றை உட்கொண்டதன் பின்னர் காட்டு யானைகள் வன்முறையில் ஈடுபடுவதாகவும், வாகனங்களைத் தாக்குவதாகவும் காட்டு யானைகளால் தாக்குதலுக்கு உள்ளாகும் மக்கள் உதவியற்ற நிலையில் ஓடும் காணொளிகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் மோசடிகளும் தற்போது இடம்பெற்று வருகின்றது.

இதனிடையே, புத்தல, மொனராகலை பகுதிகளில் உள்ள யூடியூப் சமூக ஊடகத்தளத்தை நடத்தும் சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு முயற்சித்த வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாக தெரியவந்துளளது (ஐ)

# இன்று நிறைவுக்கு வரும் டெல்லி சட்டசபை தேர்தல் பிரச்சாரம்



டெல்லியில் நாளை மறுநாள் சட்டசபை தேர்தல் நடைபெறவிருக்கின்ற நிலையில் இன்றுடன் பிரச்சாரம் முடிவடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆளும் ஆம் ஆத்மி, பா.ஜனதா, காங்கிரஸ் இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. 70 தொகுதிகளிலும் மொத்தம் 699 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

டெல்லியில் மீண்டும் ஆட்சியை பிடிக்க ஆம் ஆத்மி தீவிர தேர்தல் பணியில் ஈடுபட்டு வரும் அதேவேளை பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளும் ஈடுபட்டு வருகின்றன.

மாநிலத்தில் கடந்த சில வாரங்களாக தீவிர பிரச்சாரம் நடந்து வருகிறது. கட்சிகள் அனைத்தும் ஒன்றின் மீது மற்றொன்று வைக்கும் குற்றச்சாட்டுகளால் பிரச்சார கூட்டங்களில் அனல் பறக்கிறது. இந்த நிலையில் பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவடைகின்றது.

தேர்தல் பிரச்சாரத்தில் பா.ஜனதா, ஆம் ஆத்மி, காங்கிரஸ் கட்சிகளை சேர்ந்த மூத்த தலைவர்கள் மும்முரமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மங்களூரு– டெல்லி இடையே தினசரி நேரடி விமான சேவை ஆரம்பம்!




*மங்களூருவில் இருந்து ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் சார்பில் தினமும் டெல்லிக்கு விமானங்கள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.*


*தட்சிண கன்னடா மாவட்டம் மங்களூரு அருகே பஜ்பேவில் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவில் உள்ள பல்வேறு நகரங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகிறது.*

*இந்நிலையில் மங்களூருவில் இருந்து நாட்டின் தலைநகர் டெல்லிக்கு நேரடி விமானம் இயக்கப்படாததால் பயணிகள் பெரும் அவதி அடைந்து வந்த நிலையிலே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.*

*இந்த நிலையில் நேற்று காலை 6.40 மணியளவில் மங்களூருவில் இருந்து 167 பயணிகளுடன் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் டெல்லிக்கு தனது முதல் பயணத்தை தொடங்கியது. அந்த விமானம் டெல்லி சர்வதேச விமான நிலையத்தில் காலை 9.35 மணிக்கு தரையிறங்கியது. அப்போது அந்த விமானத்துக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதேபோல் டெல்லியில் இருந்து மங்களூரு நோக்கி காலை 6.40 மணிக்கு ஒரு விமானம் 144 பயணிகளுடன் புறப்பட்டது.*

*அந்த விமானம்மங்களூரு விமான நிலையத்தை காலை 9.35 மணிக்கு வந்தடைந்தது. இதேபோல் மங்களூருவில் இருந்து இண்டிகோ விமான நிறுவனம் சார்பில் டெல்லிக்கு மாலையில் விமானம் இயக்கப்பட்டு வருகிறது. இதுதவிர மங்களூருவில் இருந்து புனேவுக்கு வார இறுதியில் இரு நாட்கள் விமானம் இயக்கப்பட்டு வருகிறது.*

## தெலுங்கானாவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வெளியான சாதிவாரி கணக்கெடுப்பு முடிவுகள்




பீகார் மற்றும் காங்கிரஸ் ஆளும் கர்நாடக மாநிலத்திற்குப் பிறகு தெலுங்கானாவில் தற்போது சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சி அளித்த தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் தெலங்கானாவில் கடந்த ஆண்டு நவம்பர் 6ம் திகதி தொடங்கிய கணக்கெடுப்பு 50 நாட்கள் நடைபெற்றது.

தெலுங்கானாவில் 3,54,77,554 பேர் மற்றும் 1,12,15,134 குடும்பங்களிடம் வீடு வீடாகச் சென்று சமூக-பொருளாதார, கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் மற்றும் சாதி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் புள்ளிவிவரங்கள் மாநில அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

தெலங்கானா மக்கள் தொகையில் மொத்தம் 56.33மூ பேர் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என சாதிவாரி கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. அவர்களில் முஸ்லிம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 10.08% பேரும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 46.25% பேரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக பட்டியல் சமூகத்தினர் 17.43% பேரும் பழங்குடியினர் 10.45% பேரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தெலுங்கானாவின் மொத்த மக்கள் தொகையில் முற்பட்ட வகுப்பினர் 13.31% பெரும் முஸ்லிம்களில் முற்பட்ட வகுப்பினர் 2.48% பெரும் உள்ளது.

அம்மாநிலத்தில் மொத்தமாக 50.51% ஆண்கள் மற்றும் 49.45% பெண்கள் உள்ளனர் என்று கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டொலருக்கு நிகரான இந்திய ரூபாய் பெறுமதி வரலாறு காணாத சரிவு!



வாரத்தின் முதல் நாளான இன்றைய வர்த்தகம் தொடக்கத்தில் டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் பெறுமதி 67 சதவீதம் குறைந்து இதுவரை இல்லாத அளவிற்கு 87.31 ரூபாயாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் வரிவிதிப்பின் எதிரொலியாக அமெரிக்க டொலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு 87 ரூபாய்க்கு மேல் சரிந்துள்ளது. 2024 அக்டோபரிலிருந்து ரூபாய் மதிப்பு கிட்டத்தட்ட 4% வீழ்ச்சியடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் புதிய வர்த்தகக் கட்டுப்பாடுகள் அமெரிக்க டொலரின் மதிப்பை உயர்த்தியுள்ளது. அமெரிக்க டாலரின் பெறுமதி சீன யுவான் உட்பட பிற ஆசிய நாணயங்களையும் பாதித்துள்ளது. சீன யுவானின் சரிவு இந்திய நாணயத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரூபாய் மட்டுமல்ல, டிரம்ப் வரிவிதிப்பின் விளைவாக இந்திய பங்குச் சந்தைகளும் வீழ்ச்சியடைந்தது குறிப்பிடத்தக்கது.

# குழந்தைத் தொழிலாளர்கள்:

# இன்னும் களையப்படாத கீழ்மை!





குழந்தைத் தொழிலாளர்கள் இந்த உலகின் மிகப்பெரிய சோகம். குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது உலகின் மிகப்பெரிய சட்ட விரோதச் செயல். அது இயற்கைக்கு முரணான ஒரு சமூகக் குற்றம். பகட்டாக ஜொலிக்கும் உலகின் களையப்படாத கீழ்மைகளுள் ஒன்று. குழந்தைகளின் கனவுகளை களைப்பதற்கு ஈடான வன்செயல் எதுவும் இல்லை.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு குழந்தைத் தொழிலாளர்களை "குழந்தைப் பருவத்தை இழந்த குழந்தைகள்" என்று குறிப்பிடுகிறது. அவர்களின் ஆற்றல் மற்றும் சுய கௌரவத்தை இழந்து, உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்கும் செயல்" என்று இதை வரையறுக்கிறது.

குழந்தைகள் செய்யும் அனைத்து வேலைகளும் குழந்தைத் தொழிலாளர்கள் என்ற வரையறைக்குள் வராது. அதாவது குழந்தையின் நேர்மறையான வளர்ச்சிக்கு பங்களித்து அவர்களை சமூகத்தில் ஒரு சிறப்பான குடிமகனாக மாற்றுவதற்கான திறன்களையும் அனுபவத்தையும் வழங்கும் செயற்பாடுகள் குழந்தைத் தொழிலாளர்கள் என்ற கட்டத்துக்குள் அடங்காது.

அப்படியாயின் யார் குழந்தை தொழிலாளர் என்றால், ஒரு குழந்தையின் உள, உடல் வளர்ச்சியை பாதிக்கும், அவர்களுக்கு மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் தீங்கு விளைவிக்கும், அவர்கள் சுதந்திரத்தை சூறையாடும் இயற்கைக்கு முரணான எந்த வேலையும் குழந்தைகளை தொழிலாளர்களாக்குறது. இதன் மூலம் பள்ளியில் சேர்வதற்கான வாய்ப்பை அவர்கள் இழக்கிறார்கள். அதனால் அவர்களின் பள்ளிப்படிப்பு தடைப்படுகிறது.

குழந்தை தொழிலாளர்களின் உச்சகட்ட கொடூரம் அவர்களை பெற்றோரிடம் இருந்தும் குடும்பங்களிடம் இருந்தும் பிரித்து, அவர்கள் ஆற்றலுக்கு ஆயிரம் மடங்கு அதிகமான வேலைப் பளுவை திணித்து, அவர்களை பெரு நகரங்களில் சிறு விலைகளுக்கு போதைப்பொருள் கடத்தல், விபச்சாரம், தீவிரவாதம் போன்ற பல சமூக விரோத செயல்களுக்காக விற்கப்படுவதும் ஆகும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து குழந்தைத் தொழி லாளர்கள் எண்ணிக்கையின் வீழ்ச்சியில் முன்னேற்றம் காணப்பட்டாலும், சமூக-பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தும் ஊமுஏஜனு-19 தொற்று நோய் குழந்தை தொழிலாளர் எண்ணிக்கையை 20 ஆண்டுகளுக்கு பிறகு முதன் முதலாக இன்னும் பல மடங்காக அதிகரித்துள்ளது. வருமான குறைவு, மூடப்பட்ட பள்ளிகள் போன்ற காரணங்களால் வறுமையில் வாடும் குடும்பங்கள் உணவு மற்றும் அடிப்படை தேவைகளை சமாளிக்க குழந்தைகளை வேலைக்கு அனுப்ப ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகளின் படி உலகெங்கிலும், 5 முதல் 17 வயது வரையிலான சுமார் 153 மில்லியன் குழந்தைகள் குழந்தைத்தொழிலாளர்களாக உள்ளனர். இதில் 73 மில்லியன் பேர் அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். உலகின் ஏழ்மையான நாடுகளில், நான்கு குழந்தைகளில் ஒருவர் தங்கள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். குழந்தைத் தொழிலாளர்களில் கிட்டத்தட்ட பாதி (72 மில்லியன்) ஆபிரிக்காவில் காணப்படுகிறார்கள். அங்கு 5 குழந்தைகளில் ஒரு குழந்தை தொழிலாளராக வேலை செய்கிறது. குழந்தை தொழிலாளர்கள் வளர்ந்து வரும் கிழக்காசிய, ஆபிரிக்கா நாடுகளில் மட்டுமல்லாது நன்கு வளர்ச்சி அடைந்த அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் கூட மிகப் பெருமளவில் உள்ளனர் என்பதுதான் அதிர்ச்சியான விஷயம்.


ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சியான, பாதுகாப்பான குழந்தைப் பருவத்திற்கும், பள்ளிக்குச் செல்லும் வாய்ப்புக்கும் தகுதியானவர்கள். ஆனால் குழந்தை தொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் இந்த அடிப்படை உரிமை மறுக்கப்படுகிறது. குழந்தை தொழிலாளர்களை முற்றாக ஒழித்துவிட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு இருந்தாலும் இது எவ்வளவு தூரம் சாத்தியமான ஒன்று என்பது மிகப்பெரிய கேள்விக்குறி.

குழந்தை தொழிலாளர்களை அடியோடு வேரறுக்க வேண்டும் என நோபல் பரிசு வென்ற கைலாஷ் சத்யாத்ரி போன்ற தன்னார்வலர்களும், குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான உலகளாவிய அமைப்புகளும் (The Global March Against Child Labor) ACE Save the Children) பல நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தை அடிமைத்தனம், கடத்தல், துஷ்பிரயோகம் போன்றவற்றை முற்றாக தடுப்பதற்கும், சமூகத்தில் இருந்து அகற்றுவதற்கும், அனைத்து குழந்தைகளுக்கும் தரமான இலவசக் கல்வியை கிடைக்கச் செய்யவும் இவ்வமைப்புகள் பாடு பட்டாலும், ஒவ்வொரு தனி நபரின் ஒத்துழைப்பும் இல்லாமல் இது சாத்தியப்படாது.

குழந்தைத் தொழிலாளர்கள் இரண்டு வகையில் உருவாகுகிறார்கள். வறுமை, கல்வி அறிவின்மை காரணமாக பெற்றோர், பாதுகாவலர்கள் தம் குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது, அல்லது தரகர்களிடம் குறைந்த விலைக்கு விற்பது ஒரு வகை. இரண்டாவது வகை குழந்தைக் கடத்தல். உலகின் இருண்ட அறைக்குள் பணம் கொழிக்கும் வணிகமாக மாறிவிட்ட குழந்தை கடத்தலில் மில்லியன் கணக்கான குழந்தைகள் குழந்தை தொழிலாளராக விற்கப்படுகிறார்கள்.

இன்று வரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத ஒரு துயரமாக இது தொடர்ந்து கொண்டிருப்பதற்கு, அரசாங்கங்கள் இலவச மற்றும் அனைவராலும் அணுகக்கூடிய கல்வியை வழங்க தவறியமை, சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் மரபுகள் முறையாகக் கடைபிடிக்காமை, குழந்தைகளின் உரிமைகள் மதிக்கப்படாமை, மக்களின் அலட்சியப் போக்கு என்று பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

> **சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகளின் படி உலகெங்கிலும், 5 முதல் 17 வயது வரையிலான சுமார் 153 மில்லியன் குழந்தைகள் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர். இதில் 73 மில்லியன் பேர் அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். உலகின் ஏழ்மையான நாடுகளில், நான்கு குழந்தைகளில் ஒருவர் தங்கள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.**



திரையில் நிழல் உலக ஹீரோக்கள் இவ்வாறான ஒரு சம்பவத்தை தட்டிக் கேட்கும் போது உணர்ச்சிவசப்பட்டு கை தட்டும் மக்கள், படம் முடிந்து வெளியே வந்து சுண்டல் விற்கும் சிறுவனிடம் பேரம் பேசி சுண்டல் வாங்கி செல்கிறார்கள். எத்தனை பேர் அந்தச் சிறுவன் ஏன் பாடசாலை போகாமல் இப்படி வேலை செய்கிறான் என்று தேடி, தீர்வு காண்கிறார்கள்? வீதியில் போகும்போது யாசகம் (7ஆம் பக்கம் பார்க்க...)

# விமானத்தில் ஏற்பட்ட திடீர் தீப்பரவல்!

அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் இருந்து நியூ யார்க் புறப்பட்ட யுனைடெட் ஏர்லைன்ஸ் விமானத்தில் தீப்பிடித்ததால் பரபரப்பான சூழல் உருவானது.

ஜார்ஜ் புஷ் இன்டர்காண்டினென்டல் விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்பட்ட நிலையில், இந்த திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

விமானம் புறப்பட தயாரான போது அதன் இறக்கைகளில் ஒன்றில் இருந்து தீப்பிழம்புகள் வெளியேறின. இதையடுத்து விமானம் டேக் ஆஃப் ஆவது இரத்து செய்யப்பட்டது. மேலும், விமானம் ஓடுபாதையில் இருந்து வெளியேற்றப்பட்டது. இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று ஹூஸ்டன் தீயணைப்புத் துறை தெரிவித்துள்ளது.

இதைத் தொடர்ந்து, ஹூஸ்டன் தீயணைப்பு துறையின் விமான நிலைய மீட்பு தீயணைப்பு வீரர்கள் களத்திற்கு விரைந்து சென்று, விமானத்தில் இருந்தவர்களை உடனடியாக வெளியேற்றும் பணிகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை யாருக்கும் காயம் ஏற்பட்டதாகத் தகவல் இதுவரை வெளியாகவில்லை," என்று ஹூஸ்டன் தீயணைப்பு துறை தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு வார காலத்திற்குள் அமெரிக்காவில் மட்டும் இரண்டு விமான விபத்துகள் நிகழ்ந்த நிலையில், இந்த சம்பவம் விமானத்தில் இருந்த பயணிகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் அரங்கேறிய விமானத்தில் 104 பயணிகள் மற்றும் ஐந்து பணியாளர்கள் விமானத்தில் இருந்ததாக நியூயார்க் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.







## வரியை உயர்த்தி அமெரிக்கா தவறு செய்துவிட்டது டிரம்புக்கு சீனா விடுத்துள்ள அதிரடி எச்சரிக்கை

வரியை உயர்த்தி அமெரிக்கா தவறு செய்துவிட்டது என அமெரிக்க அதிபர் டிரம்புக்கு சீனா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவுக்குள் வரும் சட்டவிரோத குடியேறிகள் மற்றும் போதைப்பொருட்களை காரணம் காட்டி கனடா, மெக்சிகோ நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அதிரடியாக உத்தரவிட்டார்.

இதேபோல் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதம் வரி விதி விதித்து உத்தரவிட்டார்.

நெருக்கடிகள் தணியும் வரை இந்த வரி விதிப்புகள் தொடரும் என்று வெள்ளை மாளிகை அறிவித்ததைத் தொடர்ந்து அமெரிக்க பொருட்களுக்கு கனடாவும் 25 சதவீதம் வரி விதித்தது. மெக்சிகோவும் விரைவில் பதிலடி கொடுப்போம் என்று தெரிவித்தது.

இந்நிலையில் தான் அமெரிக்காவின் வரி விதிப்புக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘அமெரிக்காவின் வரிவிதிப்பு சர்வதேச வர்த்தக விதிமுறைகளை மீறுவதாக உள்ளது.

அமெரிக்கவின் இந்த செயல் இரண்டு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும். அமெரிக்கா தனது தவறுகளை திருத்திக்கொள்ள வேண்டும்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் உலக வர்த்தக கூட்டமைப்பில் இதுதொடர்பாக வழக்கு தொடர உள்ளதாகவும் சீனா எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனடாவில் உற்பத்தியாகும் பொருட்கள் தேவையில்லை– டிரம்ப் அறிவிப்பு!



அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவி ஏற்றபிறகு சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றுவது உள்ளிட்ட அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்

அண்டை நாடான மெக்சிகோ, கனடா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதித்தார். எண்ணை இயற்கை எரிவாயு மற்றும் மின்சாரம் உள்ளிட்ட கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எரி சக்திகளுக்கு 10 சதவீத வரி விதித்தார். இதைத்தவிர சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 10 சதவீதம் வரி விதிக்கப்பட்டது.

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதை பொருட்களை அமெரிக்காவுக்குள் கடத்தப்படுவதை தடுக்க அந்நாடுகள் போதிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனக்கூறி அமெரிக்கா இந்த அதிரடி வரிவிதிப்பில் இறங்கியது.

டிரம்பின் இந்த நடவடிக்கை கனடா, மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளுக்கு கடும் அதி ருப்தியை ஏற்படுத்தியது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா பொருட்களுக்கு 25 சதவீத இறக்குமதி விதிக்கப்படுவதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார். இதே போன்று சீனா மற்றும் மெக்சிகோ நாடுகளும் அமெரிக்கா பொருட்களுக்கு இறக்குமதி வரி விதித்தது.

இந்த வர்த்தக போரால் அமெரிக்காவின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் குறுகிய காலத்தில் விலை வாசி உயரும் அபாயம் இருப்பதாக பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர். இருப்பினும் அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது முடிவில் உறுதியாக இருக்கிறார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ட்ரம்ப் அமெரிக்கா வரிகளுக்கு எதிராக பதிலடி நடவடிக்கையாக கனடா, மெக்சிகோ நாடுகள் செயல்படுகிறது. இதனால் அமெரிக்க மக்கள் பொருளாதார வலியை உணரக்கூடும்.

நாங்கள் அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக மாற்றுவோம். கனடாவில் உற்பத்தி யாகும் எந்த பொருளும் எங்களுக்கு தேவையில்லை. எங்களுக்கு ஆற்றல் இருக்கிறது.

நாங்கள் சொந்தமாக அந்த பொருட்களை உருவாக்குவோம். எங்களுக்கு தேவையான அளவை விட அதிகமாக வைத்து இருப்போம்.

கனடாவை அமெரிக்காவின் 51-ஆவது மாகாணமாக உருவாக்குவோம். இதன் மூலம் கனடா மக்களுக்கு மிக குறைவான வரி, இராணுவ பாதுகாப்பு ஆகியவைகளை வழங்க முடியும் மேலும் அவர் கூறினார்.

## 2025 கிராமி விருதுகளை குவித்த இந்திய வம்சவளிப் பெண்!

2025 ஆம் ஆண்டுக்கான கிராமி விருதுகளில் இந்திய வம்சவளியைச் சேர்ந்த பெண் இசைக்கலைஞருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

இசைத்துறையின் உயரிய விருதாகக் கருதப்படும் கிராமி விருதின் 67வது விருது வழங்கும் நிகழ்ச்சி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் இன்று நடைபெற்று வருகின்றது. இந்நிலையில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பாடகி சந்திரிகா டன் டன் சிறந்த தற்கால ஆல்பம் எனும் பிரிவில் அவரது ’த்ரிவேணி’ இசை ஆல்பத்திற்காக கிராமி விருதை வென்றுள்ளார்.

தென் ஆப்பிரிக்க புல்லாங்குழல் இசைக்கலைஞரான வௌட்டர் கெல்லர்மேன் மற்றும் ஜப்பானிய செல்லிஸ்ட் எரு மாட்சுமோட்டோ ஆகியோருடன் இணைந்து அவர் உருவாக்கிய இந்த ‘த்ரிவேணி’ இசை ஆல்பம் பல்வேறு முன்னனி இசைக்கலைஞர்களுடன் இந்தப் பிரிவில் போட்டியிட்டு வென்றுள்ளது. முன்னதாக, சென்னையில் வளர்ந்த சந்திரிகா மெட்ராஸ் கிறிஸ்துவக் கல்லூரியில் தனது இளங்கலை பட்டப்படிப்பை முடித்த இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு முதன் முதலாக வெளியிட்ட ’சோல் கால்’ இசை ஆல்பம் அந்தாண்டின் கிராமி விருதுகளில் இதேப் பிரிவில் பரிந்துரைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞனின் உடற்கூற்று பரிசோதனையில் அதீத போதை பாவனை காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டதாக கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் சிறு குற்ற செயல்களில் ஈடுபட்ட நிலையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்ததையடுத்து ஓரிரு நாட்களுக்கு முன்னரே விடுவிக்கப்பட்டவர் என்றும், சிறையில் இருந்து வெளியே வந்த பின்னர் நண்பர்களுடன் இணைந்து போதையை நுகர்ந்த நிலையிலையே, அதீத போதை காரணமாக சுகவீனமேற்பட்டது என பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், உயிரிழந்த இளைஞனுடன் சம்பவ தினத்தன்று போதையை நுகர்ந்த ஏனையவர்கள் தொடர்பிலும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## வாகனங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிக்கப்பட்ட 70 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க ஐந்து மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

"பொல்கொடுவே கடா" என்றழைக்கப்படும் செல்வந்த வாகன வர்த்தகர் ஒருவர் போலியான சேசிஸ் மற்றும் என்ஜின் எண்கள் உள்ளிட்ட மோசடியான ஆவணங்களுடன் வாகனங்களை விற்பனை செய்யும் சட்டவிரோத வியாபாரத்தை நடத்தி வருவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சோதனையின் போது, வாகனங்கள் சாதுர்யமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

சுற்றிவளைப்பின் போது பீதியடைந்த சந்தேக நபர் மயக்கமடைந்து இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இயந்திரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதகாலமாக சேவையில்லாமலிருப்பதால், இதயநோயாளிகள் மிகவும் ஆபத்தான நோயறிதல் நடைமுறைகளுக்கு ஆளாகியுள்ளதாக தெரிய வருகிறது.

இப் பிரச்சினை காரணமாக அத்தியாவசியப் பரிசோதனை தேவைப்படுகின்ற நோயாளிகள், அடுத்த ஆண்டு பரிசோதனையை மேற்கொள்ளும்படியாக நீண்ட தாமதங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

ஏற்கனவே திகதிகளைப் பெற்றவர்கள், செயலிழப்பு காரணமாக பரிசோதனையை மேற்கொள்ள முடியாமல் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சேவையைத் தனியார் வைத்தியசாலையில் அணுக அதிக செலவுகள் தேவைப்படுவதால், நோயாளிகளின் குடும்பத்தினர், இயந்திரத்தை விரைவாக சரி செய்ய வைத்தியசாலை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் அதற்கு அப்பால் உள்ள மக்களும் கராப்பிட்டிய வைத்தியசாலையை அணுகுவதுடன், அங்கு செயற்படும் எஞ்சியோகிராம் இயந்திரம் இன்மையால் பெருமளவிலான நபர்கள் ஆபத்தில் உள்ளனர்.

குழாய் எரிந்ததால் இயந்திரம் செயல்படாமல் நின்றதாக வைத்தியசாலை இயக்குநர் வைத்தியர் எஸ்டியூஎம் ரங்கா தெரிவித்தார்.

மாற்று பாகம் அமைக்க ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது, விரைவில் பழுது நீக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்படவில்லை, "என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் மீனவர்களுக்கு பிரதி அமைச்சர் எதுவித பதிலும் வழங்க வில்லை.

## இல்லத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னுடைய பட்ஜெட் 50% குறைக்கப்பட்டுள்ளது.

நான் உங்களுக்கு ஒரு உத்தரவாதம் கொடுத்து, இந்த வருடம் அதையும் காப்பாற்றுகிறேன். நாங்கள் வீணாக்குவதில்லை. முன்னாள் ஜனாதிபதிகளிடம் தியாகங்களைச் செய்யச் சொன்னோம்.

நீங்கள் குடியிருக்கும் வீடு ரொம்பப் பெரியது, 30,500 சதுர அடின்னு நாங்க சொன்னோம். வீடுகள் வயல்வெளியைப் போல உள்ளது. இரண்டு பேர் மட்டுமே வசிக்கும் போது வெறிச்சோடியது போல் இருக்கும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

கடந்த காலங்களில் புதுப்பித்தல் பணிகளுக்காக 470 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது. அது மிகவும் கனமானது மற்றும் மிகப் பெரியது என்று நாங்கள் சொன்னோம். பின்னர் அவர்கள் என்னை வெளியேற்றி என்னைப் பழிவாங்க முயற்சிக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். இது பழிவாங்கும் நடவடிக்கை அல்ல, பொதுப் பணத்தை வீணாக்காதீர்கள்.

எனவே தயவுசெய்து வீட்டைக் கொடுங்கள் என்று நாங்கள் கூறுகிறோம். உங்களுக்கு தங்க இடம் இல்லையென்றால், உங்கள் இருவருக்கும் வசதியான ஒரு வீட்டை நான் தருகிறேன். ஜனாதிபதி பதவிக் காலம் முழுவதும், 10 ஆண்டுகள், சம்பளம் வங்கிக் கணக்கில் டெபாசிட் செய்யப்பட்டது, அந்த பணம் அவருக்கு வருவது கூட தெரியாது. அவரது முன்னாள் தனிப்பட்ட செயலாளர் இந்தப் பணத்தை களவாடினார்.

அவருக்கு மட்டுமல்ல, அவருடைய மகனுக்கும் அவருடைய வங்கிக் கணக்கில் வந்த சம்பளம் குறித்து தெரியாதாம் - சம்பளத்தைப் பற்றி மறந்துவிட்டேன் என்கிறார். எவ்வளவு செல்வம் இவர்களிடம் இருக்கிறது என்று கற்பனை செய்து பாருங்கள்? அதனால்தான் பணம் குறித்து கரிசனையே இல்லாமல் இருக்கிறார்கள் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ஐ)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் பங்கேற்ற அமைச்சர் ஆனந்த விஜேபால, அரச சேவையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் எதிர்காலத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டார் (ஐ)

# இராணுவத்தினரிடம் பொதுமக்களின் 575 ஏக்கர் காணிகள்



யாழ்ப்பாணம், பெப் 03

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 575 ஏக்கர் தனியார் காணிகள் , மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ளதாக , மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ் . மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார தலைமையில் நடைபெற்றபோது , மீள் குடியேற்றம் மற்றும் காணி விடுவிப்பு தொடர்பிலான விடயம் கலந்துரையாடப்பட்ட போதே அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1775.27 ஏக்கர் காணி இராணுவத்தினரிடமும் , 160.67 ஏக்கர் காணி , கடற்படையினரிடமும் , 660.05 ஏக்கர் காணி விமான படையினரிடமும் , 28.28 ஏக்கர் காணி பொலிஸ் திணைக்களத திடமும் காணப்படுகின்றன.

அதன்படி யாழ் . மாவட்டத்தில் 2ஆயிரத்து 642.29 ஏக்கர் தனியார் காணிகள் முப்படையினர் மற்றும் பொலிசாரின் வசம் உள்ளன என தெரிவிக்கப்பட்டது (ஐ)

## ஜூலை மாதம் பேருந்து கட்டணம் உயரும்

கொழும்பு, பெப் 03

முறையான பொதுப் போக்குவரத்து முறையின்மையால் நாடு வருடாந்தம் 500 ரூபா பில்லியன் இழப்பை சந்திக்கிறது எனவும் வாகன இறக்குமதி மீதான தடைகள் தளர்த்தப்பட்டவுடன் இந்த இழப்பு இரட்டிப்பாகும் எனவும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், புதிய கார்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் இறக்குமதியால் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அதனால் ஏற்படும் செலவுகள் மீண்டும் நாட்டிற்கு சுமையாக மாறும் என அவர் எச்சரித்தார்.

இறக்குமதி செய்யப்படும் பஸ்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டுள்ளதால், ஆண்டுதோறும் ஜூலை மாதம் பேருந்து கட்டணம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது, மக்கள் தொகையில் கால் பகுதியினர் பொது போக்குவரத்தை நம்பியுள்ளனர், பலர் தனியார் வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இந்த சவால்களை எதிர்கொள்ள, உயர்தர பேருந்துகளின் இறக்குமதியை உறுதி செய்யும் அதே வேளையில், பொதுப் போக்குவரத்து அமைப்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் கெமுனு விஜேரத்ன வலியுறுத்தினார். (ஐ)

# இன்னும் களையப்படாத கீழ்மை!....

கேட்கும் குழந்தைகளை புறக்கணித்து செல்கிறோமே தவிர அவர்களுக்கான மறுக்கப்படும் உரிமைகளுக்காக குரல் கொடுக்க எவருமே நினைப்பதில்லையே? இந்த அலட்சியப் போக்கால் ஒரு சமூகமாகவும் நாம் நம் குழந்தைகளைப் பாதுகாக்க தவறி விடுகிறோம்.

குழந்தை தொழிலாளர் தான் உலகிலேயே மிக வும் மலிவான மனித வளம். பல நேரங்களில் அது இலவசமாக கிடைத்து விடுகிறது. உலக அளவில் ஏற்றுமதி செய்யப்படும் பல பொருட்களின் உற்பத்தியில் பெரும்பாலான குழந்தை தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

உலகளாவிய நுகர்வோர் மலிவான தயாரிப்புகளை கோருகிறார்கள். முதலாளிகள் மலிவான உழைப்பிலிருந்து அதிக லாபம் ஈட்டுகிறார்கள். வேகமாக வளர்ந்து வரும் நாகரீக உலகத்தின், அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிறுவனங்களுக்கு மலிவான மனித உழைப்பு தேவைப்படுகிறது. அது குழந்தை தொழிலாளர் வடிவில் இலவசமாகவே கிடைக்கிறது.

தற்போது பல நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளில் குழந்தை தொழிலாளர் ஈடுபடுத்தப்படவில்லை என்பதை சமூகப் பொறுப்போடு உறுதிப்படுத்துகிறார்கள். உதாரணத்திற்கு மெர்சிடிஸ் பென்ஸ் அதன் விநியோகச் சங்கிலியின் ஆரம்பப் புள்ளியில் இருந்து கடைசி புள்ளி வரை குழந்தைத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்பதை தம் சப்ளையர்களிடம் போடும் ஒப்பந்தத்தில் தெளிவாக சொல்லியிருக்கிறது.

விநியோக சங்கிலியில் ஏதோ ஒரு மூலையில் ஒருவர் விதிகளை மீறினாலும் வர்த்தக ஒப்பந்தங்களை உடனடியாக ரத்து செய்து அந்த மொத்த சங்கிலியையும் துண்டித்து விடுகிறார்கள். இது போன்ற பல நல்ல மாற்றங்கள் வரத் தொடங்கினாலும், இன்று வரை உலகின் எல்லா இடங்களிலும் நெருக்கடியான தொழிற்சாலைகளில், எந்த அடிப்படை வசதியும் இல்லாமல், துஷ்பிரயோகங்களுக்கு ஆளான படி, பல கோடிக் குழந்தைகள் வேலை செய்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

வயல்களிலும், சுரங்கங்களிலும் பல லட்சம் குழந்தைகள் வியர்வை சிந்தி கொண்டுதான் இருக்கிறார்கள். இது ஒரு காட்டுத்தீ. இளம் தளிர்கள் மேல் பற்றிக்கொண்ட இந்தத் தீ மெல்ல மெல்லப் பரவி, எதிர்கால உலகையே எரித்து சுடுகாடாக மாற்றிவிடும். ஒரு சமூகமாக அரசும், நிறுவனங்களும், மக்களும், சட்டமும் ஒன்றிணைந்து செயற்பட்டாலே ஒழிய இதனை அணைக்க வேறு வழி இல்லை.

எந்தக் குழந்தையும் விரும்பி வேலைக்கு செல்வதில்லை. அவர்கள் பலவந்தமாக இந்தச் சுழலுக்குள் தள்ளப்படுகிறார்கள். இந்த மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பாக வளர, சுதந்திரமாக வாழ, தரமான கல்வி கற்க உரிமை உள்ளது. அது எந்தக் காரணத்திற்காகவும் பறிக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத குற்றம்.

இன்றைய குழந்தைகள் தான் நாளைய உலகை கையில் எடுத்துக் கொள்ளப் போகிறவர்கள். அவர்கள் இன்று எப்படி நடத்தப்படுகிறார்களோ அதன் எதிரொளிப்பு தான் நாளை வெளிப்படப்போகிறது. எனவே எதிர்கால உலகை அவர்கள் நேர்மறையாக அணுக வேண்டுமா, இல்லை எதிர் மறையாக மாற்ற வேண்டுமா என்பதை இன்று நாம் தான் தீர்மானிக்கப் போகிறோம்.

உங்கள் கண் முன்னே ஒரு குழந்தை அதன் சுதந்திரத்தை இழந்து நிற்குமாயின் அங்கு உங்கள் மௌனம் களையட்டும்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.02.2025 இல் வெளியிடப்பெற்றது.